திரு எஸ். ஆண்டித் தேவர்: தலைவர் அவர்களே, 2 ஆண்டுக் காலமாக ஒருவரும் போய்ப் பார்க்காத காரணத்தாலே, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. அரசு எவ்வளவோ பணம் செலவழிக்கிறது. எனவே உடனடியாக இவைகளை ரிப்பேர் செய்வதற்கு, இந்த அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு சில குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல அரசும் தன்னுடைய கவனத்தில் கொண்டிருக்கிறது. அதைத்தான் ஏற்கெனவே நான் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அவைகளை உடனடியாக நடவடிக்கை எடுத்து பாரமரிப்புச் செய்தாக வேண்டும் என்பது உண்மை. இல்லை என்று சொன்னால் எந்த திட்டம் போட்டாலும் ஒன்றும் நிறைவேறாது. ஏனென்று சொன்னால், அதற்குப் பின்னால் பாலோ அப் ஆக்ஷன் என்னும் தொடர் நடவடிக்கை இல்லாவிட்டால், கண்டிப்பாக எல்லாத் திட்டங்களுமே பாழ் அடைந்து போகும் ஆகையினால்தான் நாம் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

N.R.E.P. திட்டத்தின் கீழ் கட்டப்படும் மாதிரி காலனி வீடுகள்

*432—(வினா எண். 18337)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) N.R.E.P. திட்டத்தின் கீழ் ஒவ்வொரு யூனியனுக்கும் மாதிரி காலனி வீடுகள் (25 இரட்டை வீடுகள்) அமைக்கும் திட்டம் அமல் நடத்தப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், மதுரை மாவட்டத்திலுள்ள 34 யூனியன்களிலும் எங்கெங்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—(அ) மற்றும் (ஆ): இல்லை எனினும் நடப்பு ஆண்டு (1983—84)ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 9000 (ஒற்றை) வீடுகளும், மலைவாழ் மக்களுக்கு 1000 (ஒற்றை) வீடுகளும் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் 31—12—1983 வரை ஏறத்தாழ 300 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

1984 மார்ச் 24]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இத் திட்டம் அமல் படுத்தப் பட்டு, இடையிலே நிறுத்தப்பட்ட நேரத்திலேதான் கொடுக் கப்பட்ட கேள்வி இது. இப்போது இது மறுபடியும் செயலாக் கத்தில் வந்து, என்னுடைய தொகுதியில் 2 யூனியன்களில் இருபது இருபது வீடுகளாக கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மதுரை மாவட் டத்தில் 34 யூனியன்களிலும் இது அமல் நடத்தப்படுகிறதா என்ற கேள்விக்கு அமைச்சரிடமிருந்து பதில் இல்லை. அப்படி 34 யூனியன்களிலும் அமல்நடத்தப்படுவது உண்மையானால், கிராமப் பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய நகரசுத்தி தொழிலாளர்களுக்கும் இத் திட்டம் அமல்படுத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கிராமம் எடுத்து ஒரு காலனி அமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்ற திட்டத்தை நாம் அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக இரட்டை வீடுகள் கட்டப்படுவதில்லை. ஆகவே, ஒற்றையாகத்தான் கட்டவேண்டும் என்ற அடிப்படையில் 9 ஆயிரம் வீடுகளும், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்காக ஆயிரம் வீடுகளும், ஆக 10 ஆயிரம் வீடுகளைக் கட்டும் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஒரு வீடு கட்ட ஆகும் செலவு 6 ஆயிரம் ரூபாய். 6 ஆயிரம் ரூபாயை இனமாகவே கொடுத்து, அதாவது மானியமாக கவே கொடுத்து இவ்வீடுகளை கட்டித்தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அண்மையில் ஆணையிட்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் கடன் கொடுத்தும், அதில் கொஞ்சம் மானியமாக கொடுத்தும் கட்டப்பட்டது. அந்த நிலையை மாற்றி, அரசே முழுவதுமாக மானியமாக கொடுக் கக்கூடிய வகையில் இந்த திட்டத்தை அமல்நடத்திக் கொண் டிருக்கிறோம். ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கிராமம் எடுக் கப்பட்டுள்ளது. அந்த நிலையில் எல்லா மாவட்டங்களுக்குமே இது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம்தானே நம்முடைய அரிசன நலத்துறையின் மூலமாக 10 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்படும் என்று அறிவிக்கப்பட்ட திட்டம். அது பற்றி அந்தத்துறையின் அறிக்கையில் கூட இருந்தது. ஆனால் என்.ஆர்.யி.பி. வேலை திட்டத்தின் மூலமாக தனியாக அதற்கென்று ஏதாவது தொகை

ஒதுக்கப்பட்டு கொடுக்கப்படுமா என்ற அடிப்படையில்தான் என் கேள்வி அமைந்திருந்தது. ஆகவே, அரிசனநலத்துறையின் மூலமாக கட்டப்படும் வீடுகளும் என்.ஆர்.யி.பி. திட்டத்தின் மூலமாக கட்டப்படும் வீடுகளும், இரண்டுமே ஒரே திட்டத்தில்தானா அல்லது வித்தியாசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய துறையைப் பொறுத்த வரையில் சொல்லுகிறேன். என். ஆர். யி. பி. என்கிற தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்னுடைய துறை மூலமாக நடத்தப்படுகிற ஒரு திட்டம். இத் திட்டத்தின் மூலமாக 10 ஆயிரம் வீடுகளைக் கட்ட நாம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தேசீய வேலை வாய்ப்புத் திட்டம் மத்திய அரசு கொடுக்கின்ற நிதியிலிருந்து மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. (குறுக்கீடு) மாநில அரசு, மத்திய அரசு இரண்டும் சேர்த்து நிதி உதவி செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்திலிருந்து வீடுகள் கட்டுவதற்காக, பாலங்கள் கட்டுவதற்காக. சாக்கடைகள் கட்டுவதற்காக, திட்டங்களை தீட்டி எடுத்துக் கொண்டு வருகிறோம். என்னுடைய மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டு சாக்கடையை கட்டுவதற்கான திட்டங்கள் நிறைய இருந்தாலும் அந்த நிதியிலிருந்து முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்காக ஒதுக்கி மையங்களை கட்டிவிட்டு, இதை நிறுத்தி விட்டார்கள். ஆகவே இனி வருகின்ற நிதியை ஒவ்வொன்றிற்காக பிரித்து, சாக்கடைக்கு இவ்வளவு, வீடுகள் கட்ட இவ்வளவு, பாலங்கள் கட்ட இவ்வளவு என்று பிரித்து வைத்து, இப்படி ஒரு துறையை முழுவதுமாக புறக்கணிக்காமல், எந்தெந்த செலவிற்கு அதைச் செய்ய வேண்டுமோ அதற்கே செலவு செய்யும் வகையில் ஒதுக்கீடு செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிலே தேசீய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் 36 கோடி ரூபாயை நாம் செலவழித்திருக்கிறோம். அதிலே 18 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்தது. 18 கோடி ரூபாய் இந்த மாநில அரசு போட்டது. இந்தியாவிலேயே இத்திட்டத்தின் கீழ் அதிகமாக வேலை கொடுத்ததும், அதே நேரத்தில் கொடுத்த பணத்தை முழுவதுமாக செலவழித்ததும் தமிழகம் தான் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே அந்த அளவுக்கு தமிழ்நாடு தான் மற்ற மாநிலங்களுக்கே இதில் வழி காட்டுகிற நிலைமையில் நாம் இந்த தேசீய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தை சிறப்பாக செய்து வருகிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாக என்னென்ன வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விதி முறைகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். அந்த விதி

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 24]

முறைகளுக்கு ஏற்பதான் செய்து வருகிறோம். முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்காக கட்டிடங்கள் கட்டுவது பற்றிச் சொன்னார்கள். அந்தச் சத்துணவு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களே பாராட்டி இருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்திற்காக கட்டடங்கள் கட்டக் கூடாது என்பது அல்ல. அந்தத் திட்டத்திற்கும் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென்ற விதிமுறைகள் இருக்கின்றன. அவைகளின்படி அவைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகின்றன. வடிகால் வசதிகள் இல்லையென்றால் அதற்காக இந்தத் திட்டத்தின் மூலமாக அவைகள் செய்யப்படுகின்றன. ஆகவே எந்த எந்த ஊர்களிலே இல்லையென்று சொன்னால் அவைகளை எல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை கண்டிப்பாக அரசு எடுக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : இந்தமாதிரி காலனி கட்டுகிற நேரத்திலே அந்த வீட்டுக்குரியவர் மனித உழைப்பை நல்கத் தயாராக இருக்கிறார். ஆனால் மனித உழைப்பைத் தரத் தயாராக இருக்கிற அவரிடமிருந்து 600, அல்லது 650 ரூபாய் ஷேர் அமவுன்ட் கொடுக்கச் சொல்கிறார்கள். வீடுகள் கட்டுகிற நேரத்திலே அந்த வீட்டுக்குரியவர் மனித உழைப்பைத் தருவதற்குத் தயாராக இருக்கிறார் என்கிற போது அவர் ஷேர் அமவுன்ட் கட்ட வேண்டுமென்று கட்டாயப் படுத்தாமல் இருப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பணம் ஆறு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். வீட்டுச் சொந்தக்காரர் அதற்கான மனித உழைப்பைக் கொடுக்க வேண்டுமென்ற வகையிலே அவர் தனக்கு வேண்டிய வீடு கட்டப்படுகிற நேரத்திலே அது நிரந்தரமான வீடாக, ஒழுகாத வீடாக இருக்க வேண்டுமென்ற முறையில் தான் இந்தத் திட்டத்தை நாம் அமல் படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அதற்கு முன்வந்தால் 600 ரூபாய் கட்ட வேண்டுமென்ற விதிமுறை தளர்த்தப்படும்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், கீழ்ப் பகுதிகளில் கட்டப்படும் வீடுகளுக்கு ஆறு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மலைப் பகுதியிலே உள்ள ஒன்றியங்களிலே வீடுகள் கட்டப்படுகிற போது அந்த வீடுகளுடைய மதிப்பு என்ன ? அதற்காக தொகை எவ்வளவு ஒதுக்கப்படுகிறது ?

[1984 மார்ச் 24

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே கட்டப்படுகிற வீடுகளுக்காக 6 ஆயிரம் அல்ல, 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அங்கே இருக்கிற மெட்டிரியல்ஸ் காஸ்ட் அதிகமாக இருக்கிற காரணத்தால் 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் ஆயிரம் வீடுகள் கட்டுகிற திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்திலுள்ள வினோபா ட்ரஸ்ட் என்ற அமைப்புக்கான ஜெர்மன் நிதியுதவி.

433—(* வினா எண் 19942) திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதி, கொங்கர்பாளையம் குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்தில் வினோபா ட்ரஸ்ட் என்ற அமைப்புக்கு ஜெர்மன் நிதி கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ? அது எந்தெந்த பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது ?

(இ) எத்தனை ஆதி திராவிட மக்கள் பயன்பெற்றுள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்தில் வினோபா ட்ரஸ்ட் என்ற அமைப்பு இல்லை. இங்கு பூமிதான இயக்கத்துக்கு கிடைத்த 304.04 ஏக்கர் நிலத்தில் அரசு ஆர்ஜிதம் செய்த 56 ஏக்கர், சாலை வசதிக்கு 18 ஏக்கர் நிலம் போக மீதி நிலம் 230.04 ஏக்கர் நிலமில்லா ஏழைகளுக்கு வழங்கப்பட்டு இந்த நிலத்தை மேம்பாடு செய்ய மேயர் அறக்கட்டளை ஈடுபட்டுள்ளது. இந்த சர்வோதய ஸ்தாபனம் மேற்கு ஜெர்மனி அக்ரோ ஆக்ஷன் நிறுவனத்திலிருந்து பண உதவி பெறுகிறது.

(ஆ) மேயர் அறக்கட்டளை மொத்தம் 21.65 இலட்சங்கள் பெற்றுள்ளது. இப் பணம் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தர சமுதாய கட்டடங்கள் கட்ட, ஏழை விவசாயிகளுக்கு விவசாய தளவாட சாமான்கள், உழவு மாடுகள் வாங்க போன்ற பணிகளுக்கு உபயோகிக்கிறது.

(இ) நிலம் பெற்றவர்களில் 17 பேர் மலை வாசிகளும், ஏனையோர் பின் தங்கியவகுப்பையும் சேர்ந்தவர்கள்.